[1986 நவம்பர் 20

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. தகவல் கோரல்.

மின் வாரியத் தலைவர் பற்றி நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள் மீது முறையீடு.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order. நேற்று நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஒரு கருத்தைச்சொன்னார்கள். நம்முடைய மின் வாரியத் தலைவர் பற்றிய ஸ்ட்ரிக்ச்சர் அடங்கிய நீதிமன்றத் தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் அட்மிட் ஆகிவிட்டது. ஆகவே, அதுபற்றி பேசுவது சப்-ஜூடிஸ் என்று சொன்னார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்கள்படி அது சரியல்ல. ஏனென்றால் Misleading the House என்று ஆகிவிடக் கூடாது. உண்மையான தகவல் தெரிய வேண்டும்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என்னிடம் கொடுங்கள்.

Thiru A. RAHMANKHAN : He is misleading the House...

MR. SPEAKER : Are you sure?

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, leave for Appeal, number ஆகியிருக்கிறது. Writ Petition admit ஆகவில்லை. நாளைக்குத் தான் அட்மிட் பண்ணலாமா, பண்ணக்கூடாதா என்று இருப்பதாக பரவலாக வழக்கறிஞர்கள் மூலம் நான் கேள்விப்படுகிறேன். எனவே இது சப்-ஜூடிசா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : If leave petition is numbered, it is sub-judice.

Thiru A. RAHMANKHAN : The appeal is not pending.

MR. SPEAKER : The Special Leave petition is numbered (interruptions).